# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey. P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச] யாழ்ப்பாணம்:- நந்தன வூ மார்கழி மீ உசூஉ வெள்ளிக்கிழமை (9 Jan. 1953) [இல - எரு]


# ஒடுக்கப்பட்டவர்கள் யார்?

## நசுக்கப்பட்டவர்கள் யார்?

### அமெரிக்க எழுத்தாளரின் அபிப்பிராயம்

ஒடுக்கப்பட்டவர்கள் என்ருல் யார்? நசுக்குண்டவர் யார்? இந்தக் கேள்விக்கு விடையிறுக்கையில் அமெரிக்க நீக்ரோ என்ற பேச்சு ஆசிய நாடுகளில் சுற்றிவரும் அமெரிக்கர் காதில் நூதனமாக விழாமற்போவதில்லை.

"நீக்ரோ மக்களை நடுங்க வைத்து வதைத்துக் கொல்லும் நீங்கள் சனநாயகத்தைப் பற்றிப் பேச எங்களிடம் எப்படி வருகிறீர்கள்? நீக்ரோ மக்களுக்கு எல்லாருக்கும் உரிய பொது உரிமைகளை மறுப்பது ஏன்?" — இவ்வாறு ஆசிய நாட்டினர் கேட்கின்ருர்கள். அப்படிக் கேட்டுவிட்டு எங்களை வேதோ வென்றுவிட்டதுபோல ஒரு பார்வையும் செலுத்துகின்ருர்கள் வெளி நாட்டவர்.

நோர்வே நாட்டின் தலைநகர் ஆஸ்லோவில் ஒரு விடுதியில் தங்கி யிருந்தேன். நோர்வே

**நீக்ரோப் பத்திரிகைத் துணை ஆசிரியர் George S. ஷ்ராய்லர்**

நண்பர் ஒருவர் அருகே அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தார். "இவ்வளவு அருமையான இடத்தில் இருப்பதும் இவ்வளவு அழகான இடத்தில் உண்பதும் எப்படியிருக்கிறது?" என்று அவர் என்னிடம் பரிவோடு வினவினர். அவருடைய எண்ணம் எனக்கு ஆஸ்லோ சுகம் "காணுத கண்டது" போல இருந்திருக்க வேண்டுமென்பதாகும். ஆனல் அமெரிக்காவில் எத்தனையோ நல்ல நல்ல விடுதிகளில் தங்கியிருந்த எனக்கு இது ஒன்றும் புதியது அல்ல என்று நான் சொன்னதை அவரால் நம்பவே முடியவில்லை.

உருகுவேநாட்டு அரசாங்க அதிகாரி ஒருவர் "ஐயையோ பாவம் நீக்ரோ" என்று பூர்வபீடிகை போட்டுக்கொண்டு — அன்போடு தான் — ஒரு பெருங் கதையையே வளர்த்துவிட்டார். சனநாயக அமெரிக்காவில நீக்ரோக்கள் படிப்படியாக முன்னேறி வருவதை எடுத்துச் சொல்லி உருகும் அந்த உருகுவே நண்பரைச் சமாதானம் செய்தேன். அமெரிக்க நீக்ரோக்கள் சொந்தத்தில் வைத்துக்கொண்டிருக்கும் மோட்டார் வாகனங்களை எண்ணினல், அவ்வளவு பெரிய [illegible]

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## சாவுக்கு ஏது சாராயம்

கொழும்பு புறக்கோட்டை வாசியும் ஐம்பது வயசினருமாகிய பஸ்தியான் பெறுரு என்பவர் வேண்டியபடி சாராயம் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து வாயில் வெள்ளைச் சுருட்டுடன் நித்திரை செய்தார். நித்திரை செய்தபடியே இந் நிலவுலக வாழ்வையும் நீத்தார்.

மட்டிலாத மதுபானமே காரணமென்பது விசாரணையால் அறியவந்தது.

உ

## தேனூர் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ!

திருச்சிற்றம்பலம்.

நானூரென் னுள்ளமார் ஞானங்களாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி
யூனூ ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
தேனூர் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்.

# ஊர்காவற்றுறை - வெற்றிபெற்றது

## 5-வது சாராயக் கடை அகன்றது!

### எழுபத்தெட்டு விகிதம் சம்மதம்

**மீண்டும் மீண்டும் வெற்றியே பெற்று வருகின்றது மதுவிலக்கியக்கம். .... .... ....**

மகாசபையாரர் ஊக்கமும் பன்மடங்கு பெருகிக் கொண்டே வருகின்றது.

மக்களும் மனத் திட்டத்தைக் கூட்டுகின்றனர். எக் கதி நேரிலும் இலட்சியம்விடோம்! என்றுதொண்டு செய்கின்றனர்

இவை யாவும் ஊர்காவற்றுறையில நடந்த சாராயக்கடை நீக்க வாக்கெடுப்பிலிருந்து அறியக் கிடக்கின்றன.

மதுஅரக்கன் தன் விதி எவ்வாறுபோகின்றதென்றிதுவரை அறிந்திருந்தும்... கடைசிப் போராட்டத்தை யாழ்நகரில் ஆடிவேதிர எண்ணியிருக்கிருன்! மயக்கத்திலழுந்திக் கிடக்கும் இந்த அசுரன் வலிமையிற் சொடியன்!!.......

எனவே போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதுமல்லாமற் பன்மடங்கு உற்சாகத்துடன் சீராகச் செய்யவேண்டியது மக்கள் கடமை.

வெற்றிபெற்ற விகிதங்களை மீண்டும் யாழ்நகர வாசிகளுக்கு ஞாபகப்படுத்துகின்ருேம்.

| | | |
|---|---|---|
| பளை | .... .... | 81 |
| சாவாச்சேரி ... | .... | 84 |
| பருத்தித்துறை | .... | 70.3 |
| சங்கானை | .... .... | 66 |
| ஊர்காவற்றுறை ...., | | 78 |

அரசியல் அலை — பாராளுமன்றத்தில்:

# அரிசி அளவுப் பங்கிடு அந்நியருக் கில்லையாம்...!

## உள்ளவர்களும். பெற்றுக்கொள்ளமுயற்சி!

**செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆரம்பமான பாராளுமன்ற மக்கள் பிரதிநிதிச்சபைக் கூட்டத்திற் பதின்மூன்ருவது தொடரில் அரிசிப்பங்கீட்டுப் புத்தகம் வழங்கப்படுமுறை பலமாகக் கண்டிக்கப்பட்டது!**

பொதுவுடைமைக் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன் அவர்கள் பங்கீட்டுக் காரியாலயத்தை ஓர் மூளைப் பிசகு நிலையமென்று வர்ணித்தார். திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் தொடர்ந்து கண்டனஞ் செய்து பங்கீட்டுப் புத்தகத் துரிமை உள்ளவர்கள் என்று கணிக்கப்பட்டவர்களும் அப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளப்படும்பாடு சொல்லொணுததென்றனர்.

மன்னூர்ப்பிரதிநிதி திரு. க. சிற்றம்பலமவர்கள் ஆபிரிக்க மலான் முறையிலும் பார்க்க இந்நாட்டில் இதக் காரியத்தில அரசாங்கம் எடுத்துக்கொண்ட சாதி வேற்றுமையைக் காட்டும் அரசாங்க நடவடிக்கைகள் மிகவும் வெட்கத்தைக் கொடுக்கின்றனவென்று காரசாரமாகப் பேசினர்.

சமசமாசத் தலைவரும் இவ்வாறு தொடர்ந்து கண்டனம் புரிந்தார். திரு. S. W. R. D. பண்டாரநாயகவும் அரசாங்க நடவடிக்கைகள்மீது பாணம் தொடுத்தனர். பிரதம மந்திரி இப்பேச்சுக்களுக்கெல்லாம் பதிலளிக்கையிற் கள்ளமார்க்கமாக வரும் இந்த நாட்டிற் புகுவது சட்ட விரோதமென்றும். அவ்வாறு புகுந்தவர்களுக்கு அரிசிப் பங்கீட்டுப்புத்தகம் வழங்குவது நியாயமாகாதென்றும் அரசாங்க உதவி பெற்றுக் குறைந்த விலையிற் பெற்றுக் கொள்ளும் அரிசி உதவப்படாதுவிட்டால் அவ்வாறு கள்ளமார்க்கமாக வந்தவர்கள் பட்டினி கிடக்கவேண்டியதில்லை யென்றும் அவர்கள் வேறு விதமாக உணவைப் பெறலாமென்றும் கூறினர்.

திருத்தொண்டர் திருநாள்

# சிவனடியாருக்கு ஏதையும் அர்ப்பணஞ்செய்யுஞ்சிந்தையர்

## மாணக்கஞ்சாற நாயனூர்

### இன்று இவர் திருநாள்

கஞ்சாறூரிலே வேளாண் குலத்திலே அரசர் சேனுபதிப் பதவி பெறுங் குடியிலே திருவவதாரஞ் செய்து மானிடயாக்கை பெற்றதன் பயனுகிய மெய்ப் பொருளையறிந் துணர்ந்தார் மானக்கஞ்சாற நாயனூர். அவருக்குச் செல்வம் பெருகியது. அது சிவனடியாருடைய தாகும் என்னுஞ் சிந்தையுடையாராய் அவர்களுடைய குறிப்பறிந்து அவர்களுக்குக் கொடுத்து வந்தார்.

மாறில் பெருஞ் செல்வத்தின்
வளம்பெருக மற்றெலாம்
ஆறலவுஞ் சடைக்கற்றை
அந்தணர்தம் அடியாராம்
ஈறில்பெருந் திருவுடையார்
உடையாரென் றியாவையுமோர்
கூறுவதன் முன் அவர்தங்
குறிப்பறிந்து கொடுத்துள்ளார்.

இவருக்குப் பிள்ளைப்பேறின்மையால் சிவபெருமானை வழிபட்டு ஒரு பெண் மகவைப் பெற்ருர். அப் பெண், மணப் பருவமெய்தியதும் ஏயர்கோன் கலிக்காம நாயனுருக்கு அப் பெண்ணை விவாகம் செய்து கொடுக்கும்படி சில முதியோர் கேட்டனர். மானக்கஞ்சாற நாயனர் அதற்கிசைந்தும் குறிஞர் மணவினைநாள வகுத்தனர். குறித்த நாளிலே ஏயர்கோன் கலிக்காம நாயனூர் மணக்கோலங் கொண்டு சுற்றத்தவர் சூழ்ந்துவர, மங்கல வாத்திய மொலிப்பக் கஞ்சாறூர் மருங்கை அடைந்தார். அவர் கஞ்சாறூரை யடைதற்குமுன் சிவபெருமான் ஓர் மகாவிரதி வடிவங்கொண்டு மானக்கஞ்சாற நாயனூர் வீட்டுக்குச் சென்ருர்! நாயனூர் எதிர் சென்று வணங்கினூர். இங்கே நடக்கப்போவதென்னென்று விரதியார் கேட்க

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹு மார்கழி மீ உசு உ வெள்ளிக்கிழமை

## அடிமைத் தளை அகற்ற அடிகோலியவர்

அந்நியர் ஆட்சி ஒழிந்தது; இந்நாடு தானாக இயங்கும் பெருமையை மீண்டும் பெற்றது. இப்பெரும் பெற்றியை அடைந்த பேருவகையில் மூழ்கிய மக்கள் உண்மையாக இந்த நிலைமைக்காக உழைத்த முன்னோர்களை உரிய முறையில் ஞாபகப்படுத்தாது விட்டனர் போலும். இலங்கைத் தீபகத்தில் இந்தியாவிற் போன்று ஒரு மகாத்மா சுதந்திரப் போரை ஆரம்பிக்கவுமில்லை நடத்தவுமில்லை எனினும், படிப்படியாகச் சிறிது சிறிதாக முயன்று எறும்பூரக் கற்குழியும் என்றாங்கு இந்நாட்டின் எதிர்கால நன்மைக்காகத் தொண்டாற்றிய தமிழ்ப் பெரியார்கள் அநேகரெனினும் தலைசிறந்து விளங்கியவர் Sir பொன்னம்பலம் அருணாசலப் பெரியார் எனக் கூறுவது மிகையாகாது.

ஆங்கிலேயப் பல்கலைக் கழகப் பட்டதாரியாயிருந்தார், இலங்கை அரச கல்லூரியிற் பரிசுபெற்ற மாணவர் திலகமாய்ப் புகழ் படைத்தார், சட்டநூலறிஞராக விளங்கினார், அரசாங்கப் பகுதியிற் பெருந்தொழில் புரிந்தார் என்று நாம் அவரைப் பாராட்டவில்லை. அருணாசலப் பெரியார் தாம் பிறந்த நாட்டை நற்றவானிலும் சிறந்ததாக உணர்ந்து அந்நாட்டின் அடிமைத் தளையை அகற்ற அரிது முயன்றதுவுமல்லாது அப்பணியைப் பலரும் தொடர்ந்து செய்வதற்கோர் அகில இலங்கைத் தேசிய மகாநாட்டை ஆரம்பித்து மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி உண்டுபண்ணிவிட்டார் என்பதை இக்கால இளைஞர்கள் குறிப்பாகப் புறநாட்டுக் கொள்கைகளைச் சத்திய வேத வாக்குகளாகக் கொண்டு அரசியல் ஞானம் பேசித் திரியும் மேலைத் தேச நாகரிக அரசியற் குழுவினர் நன்றாய் அறிய வேண்டும் என்றே ஞாபக நல்லுரை வரைகின்றோம்.

அடிமை நாடு குடிமை பெறவேண்டும் என்று இதயத் துடிப்பும் உதிரத் தெழுச்சியும் உண்டாகின்ற தன்மை அந்நாட்டு மக்களிடத்தே உதிப்பது நூதலமன்று. அந்த உணர்ச்சியை நேரான முறையில் நெறியானவகையில் அமைத்து உரிமைப் போராட்டத்தை நடத்துவதே பெருமையுடைத்து. இற்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன்னர் அருணாசலப் பரோபகாரியார் தமிழர் சிங்களவர் முகம்மதியர் ஆதியாம் இந்நாட்டவர்களிடையே உள்ளதை உள்ளவாறுரைத்து உரிமையைக் கேட்க உறுதி கொள்ள வேண்டுமென்று அரசியற் கட்சியை ஆரம்பித்துப் பெரிதும் முயன்றார். என்றது பழங்கதையாய் விட்டமைக்குக் காரணம் இக்காலப்போக்கிற் புறநாட்டிலிருந்து இங்கே இறக்குமதியாகியிருக்கும் புரட்சி உணர்ச்சியே.

அருணாசலப் பரோபகாரி பல்லாயிரக் கணக்கானோரைக் காலிமுகக் களரியின்றும் ஒலிபரப்பிமூலம் நாட்டியக் கூத்தாடி இடிமுழக்கஞ் செய்து கோபக் கனல் மூட்டி ஆவேச உணர்ச்சியை எழுப்பி, 'அடியுங்கள் பிடியுங்கள், சுடுங்கள், தரத்துங்கள்' என்று மக்களின் செவிப்புலனுக் குணவூட்டியவரல்லர். கல்வி கற்றபின் அதற்குத்தக நின்ற தன்மையினுலுண்மை அறிவுடையாராகையால், ஆங்கிலப் படிப்பில் அதிநுண்ணிய மதிபடைத்தவர் என்ற புகழுரை பெற்றும் தாய்மொழியும் சைவமும் உயிர்க்குயிராய் உள்ளன என்ற உள்ளங்கொண்டவராகையால், எப்பொருளிலும் மெய்ப்பொருள் காணும் நோக்குடையவராகையால், அரசியற் போராட்டத்தை அமைதியாக ஆழ்ந்த புத்தியோடு மறுசாராரும் மனவெறுப்படையா வண்ணம் ஆரம்பித்து வழிகாட்டினார்.

தலைவன் என்ற சொல்லுக்குப் பலப் பலவாறு பொருள் கொள்ளுகின்றனர் இக்கால அரசியல்வாதிகள். ஆனால் உண்மையில் மெய்யறிவும் நல்லொழுக்கமும் இறைபணியும் உள்ளவரே தலைவராகும் பெற்றிவாய்ந்தவர். இவ் வரைவிலக்கணப்படியே மகாத்மா காந்திப்பெரியார், ஸ்ரீ இராசேந்திரப்பிரசாத், ஸ்ரீ நேரு, ஸ்ரீ இராசகோபாலாச்சாரியார் போன்றவர்களை உலகமே தலைவர்கள் என்று உவந்தேற்கின்றது. அவ்வரையறைக்கிணங்க அருணாசலப்பெரியாரும் சைவநூற்கள் பலவாராய்ந்து மெய்ப்பொருள் உண்மை விளங்கினவராய் இறைநெறியில் நின்ற பெருமையினாலே அரசியற்றலைவராகக்கூடிய திறமையைப் பெற்றனர் எனலாம்.

வருங்கால வீரர்களே! என்று இளைஞர்களை அறைகூவி அரசியற்கட்சிக்காரர் ஒவ்வொருவரும் அழைக்கின்றனர். இந்தக் கூக்குரல் எல்லாம் கேட்டுக் காற்றில் புரண்டோடும் நாவாய்கள் எனவ[illegible] நிற்கும் இளைஞர்[illegible] கரை விளக்கம் போன்று திற்கும் மகாத்மா காந்திப் பெரியார் முதலாயினோரின் வாழ்க்கை முன்மாதிரியைக் கண்டுங் காணாது திரைமீது செல்வதை நம்பிக் கெடுகின்றார்கள். ஆகையினால் எந்நாட்டு மக்களும் அந்நாட்டு முன்னோரின் ஞாபகத்தை அடிக்கடி இளைஞருக்கெடுத்துக் காட்டுதல் மிகவும் வேண்டப்படுகின்றது. இவ்வகையில் இலங்கைவாழ் மக்கள் அருணாசலப் பெரியாரின் [illegible] வாழ்க்கையை மறவாது நினைவு கூருவார்களாக.

# "மன்பதை" உற்பத்தி வரையறை!

## தன்னாற்றலில்லா மனிதன் திட்டம் போட முடியுமா?

குடும்ப வரையறைத் திட்டம் அவசியமா? என்னும் பொருள்பற்றிய விவாதம் ஒன்று சென்ற 3-1-53 சனிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மண்டபத்தில் நிகழ்ந்தது. இதைக் கேட்டுப் பலர் திகைப்புற்றுச் சென்றனர். உலகில் மானிடயாக்கை எடுத்தவர் அனுட்டிக்கவேண்டிய முறைகளைத் தெளிவாக நாவலரவர்களே சிறச்சிறவினா விடைகளாக விளக்கி எழுதி வரையறுத்துள்ளார்.

அறிவும் ஆற்றலுமுள்ள பெரியார்கள் வேதசிவாகம விதிப்படி தொகுத்து வகுத்த திட்டப்படி ஒழுகுவதே குடும்ப வரையறைத் திட்டமாம். வாதத்தைத் தொடக்கியவர் சிசு உற்பத்தியைக் குறைத்து வரையறுத்தல் நலமெனக் கூறினர். அவருக்குச் சார்பாகத் தொடர்ந்து பேசியவர்களும் சனத்தொகை கூடினால் பஞ்சமதிகரிக்கும், பாடசாலைகளிடம் இராதெனப் பல நியாயங்களெடுத்துக் கூறினர். இது வாதத்திற்கு வந்த கட்சியினர்க்கு வாய்ப்பாக நியாயங்கூறப் பேருதவியாகவிருந்தது. இரு சாராரும் அறிவாளிகள்தான். பௌதிக சாஸ்திரங்களுடன் ஞானசாஸ்திர அறிவுமுள்ளவர்களே இத் தர்க்கத்திற்கு அருகதையுடையர்.

### ஏது குடும்பவரையறை?

இந்தத் தேசம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம். இதற்குரிய வரையறைகளைக் கையாளுவோமாகில் அதுதான் குடும்ப வரையறை. அவ்வரையறையில் சிசு உற்பத்தியை வரையறைப்படுத்தும் பிரமாணங்களுமடங்கும். தவம் செய்து புத்திரரைப் பெறவேண்டும் எனச் சமய சாஸ்திரங்கள் கூறுகின்றன. நாம் வரையறையின்றிச் சிலபேதமை முறைகளைக் கையாளுகிறோம். இதனாற் பெரும்பாலும் மூத்தபிள்ளை மோட்டுப்பிள்ளையெனச் சொல்வது உலக வழக்கு.

வண்ணை

வித்துவான், க. இராமலிங்கம் அவர்கள், எழுதுவது

என்? பெற்றோர்கள் பிரபஞ்சமயக்கில் மொத்துண்டு பேதமையோடிருப்பார்கள். அவர்கள் மனோநிலைப்படியே சிசுவும் உருவாகும். பின்பு இன்னொருவகையில் மயங்கி, கல்வி கற்றுக் காசு தேடப் பிள்ளை வேண்டுமெனத் தவமிருப்பார்கள். குடும்ப வரையறைப்படி நடக்குமாற்றலுடையார், எழுபிறப்பும் தீயவை தீண்டாப் பேறுதரும் பண்புடை மக்களைப் பெறுவர். தவமென்பது நினைவு, தியானம், சிந்தனை, நல்லொழுக்கம், அன்பு, அறம், ஆகியவைகளே.

### கூட்டுதல் குறைத்தல் மனிதனால் ஆகா

அரசாங்க சபையிலும் சிலர் சிசு உற்பத்தியைக் குறைக்க வேண்டுமென யோசித்தனர். ஆன்மா சுதந்திரமற்ற துலைத்து. இது சூக்கும சித்தாகிய கடவுளின் அருள்கொண்டியக்குவதை நிரீச்சுரவாதிகளன்றி எச்சமய சாஸ்திரங்களும் மறுக்கவில்லை. சிசு உற்பத்தியைக் கூட்டுவதும் குறைப்பதும் மனிதனால் ஆகும் செயலன்று. அது இறைவன் சக்தியின் தந்தரலகமாம். சிலர்கட்கு உணவளிப்பது ஒரு சிலர் கடமையன்று. அதுவும் இறைவன் செயலேயாம். நாம் திட்டப்படுத்தும் உணவுப்பொருள் கிட்டாமற் போவதும், திட்டத்தின் மேலதிகமாய் இஷ்டப்படி கிடைப்பதும் நம் செயலெனக் கூறலாமா? முடியாது. எனவே எல்லாவுமசக்தியின்பாற்பட்டனவே.

### சிக்கனம் தேடும் வழி!

நாம் சக்தியின்பாற்பட்டுச் சிக்கன வாழ்வு தேடல் வேண்டும். சிக்கனமென்பது இடாம்பிக வாழ்வைக் குறைத்தல். ஈண்டு மூன்று வகையில் ஓரளவுக்குச் செலவைக் குறைக்கலாமென நினைக்கிறேன். முதலாவது தேச சஞ்சாரத்தில் சிதைவுறும் செலவு, இரண்டாவது நவீன நாகரீக வைத்திய அதிகப்படிச் செலவு, மூன்றாவது அரசாங்க அங்கத்தினரின் உபசாரப் பணச்செலவு. மேற்படி செலவுகளை மட்டுப்படுத்துவதனால் சேடமாகும் பணத்தைக்கொண்டு மாதவீதம் ஏக்கர்க்கணக்கான விளைநிலங்களைத் திருத்தி உணவுற்பத்தியைக் கூட்டலாம். குறித்த விளைநிலங்களைப் பண்படுத்த இலவசக் கல்வித்திட்டத்தை ஒழித்துவிடல் வேண்டும், விடவே உயர்தரக் கல்வித் திட்டத்தில் ஒதுக்கப்படும் மாணவர்களையும் பயன்படுத்தலாம். எல்லோரும் வெயிலில் நில்லாது வியர்வை சிந்தாது மேசையிலிருந்து எழுதுவதைக் கையாள விரும்பினால் பூமி திருத்தியுண்ணென்னும் வரையறையைக் கையாளுவது யார்? இவ்வகையான வரையறைகளைக் கையாளாது விட்ட கட்டில் பசிப்பிணியால் தயங்குகிறோம், வாயுள்ளவர்கள் பிழைக்கிறார்கள் மற்றையோர் வருந்துகிறார்கள். தொழுதுண் சுவையின் உழுதுண் இனிது என்பதை மறந்தோம், கஷ்டப்படுகின்றோம். இதை நினைத்து வாழ்ந்தால் எமக்கு இன்னல் வரமாட்டாது.

# வண்ணை - ஸ்ரீ வைத்தியேசுவர சுவாமி கோயில்

திருச்சிற்றம்பலம்

நதியரவு மதியிதழி புரிசடை யவிழ்ந்தாட
நண்ணுமா காச லிங்கம்
நால் வருக்குக்கலா னிழலினல் லுபதேசம்
நவிலுமற மவுன லிங்கம்
நிதிபதித னன்புடைத் தோழனா யீசான
நிலைநின்ற வேட லிங்கம்
நிவாதமுறை யிருவர்க் கழகம்ப வடிவாகி
நின்றெழுஞ் சோதி லிங்கம்
துதிதுதிக் கையானை யன்பொடும் போற்றிடுஞ்
சுயம்பான வப்பு லிங்கம்
துய்யவுணர் வோரிதய கமலா லயத்திலெழு
சுடர்போற் கொழுந்து லிங்கம்
மதிதவழு மதிலோடு கோபுரந் திகழ்வுறும்
வண்ணையெல் லையி னிறுத்தும்
மாதங்க புரிலதையல் பாகமிசை மீதமரும்
வைத்தீச மா லிங்கமே.

திருச்சிற்றம்பலம்

இந்த இலங்கைத்தீவின் கரையோரங்களிலுள்ளவூர்களைக் கவர்ந்து நூற்றமைபது வருடங்கட்கு மேற்படக் கொடுங்கோல் நடத்திய அந்நியர்களாகிய பறங்கியர் ஒல்லாந்தர் காலத்தில் இங்குள்ள சைவாலயங்களெல்லாம் இடிக்கப்பட்டொழிந்தன; அந்த ஒல்லாந்தருடைய பரிபாலனத்தின் இறுதிக்

ம. வே. தி. ச.

காலத்திலேயே, கொழும்பிலிருந்த உலாந்தேசனுடைய அநுமதி பெற்று வண்ணை வைத்தியேசுவர சுவாமி கோவில், பெருவள்ளலுஞ் சிவதொண்டருமான ஆதி வைத்தியலிங்கசெட்டியாரால் கட்டுவித்துக் கும்பாபிடேகஞ் செய்து நித்தியநைமித்திகங்கள் முட்டின்றி இனிது நடைபெறும் வண்ணம் பல நிபந்தங்களும் விதிக்கப்பெற்றன, முதன் முதற் கும்பாபிடேகம் நிகழ்ந்தது சாதாரண வருடம (1790 A. D.) சித்திரை மாசம் பூர்வபக்கச் சப்தமியோடு கூடிய பூச நட்சத்திர புண்ணிய தினமாகும். எனவே கும்பாபிடேக காலம் இற்றைக்கு 162 ஆண்டுகட்கு முந்தியாகும்.

பறங்கியர் ஒல்லாந்தரால் அழிக்கப்பட்டுப் பின்னர் பிருத்தானியர் பரிபாலன காலத்திலே தொன்மைபோல அமைக்கப் பெற்ற மாவிட்டபுரம், நல்லூர்க் கந்தசுவாமிகோயில், சட்டநாதர்கோயில் கீரிமலைச்சிவனகோயில் முதலியன இவ் வண்ணைச் சிவன்கோயிலுக்குப் பிறபட்டவாகும்; வடமராட்சியைச் சேர்ந்த புலோலிப்பசுபதீசுவரர் கோவிலே இவ் வண்ணைச் சிவன்கோயிலுக்கு அடுத்ததாக அமைந்த சிவனகோவிலென்று காலங்கண்ட முதியோர் சொல்லக் கேட்டுள்ளோம்.

வண்ணை வைத்தியேசுவரர்கோயில் மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றும் ஓங்கு அமையப்பெற்றது; இத்தலத்திற்குத் தீர்த்தம் வண்மேற்கிலுள்ள வில்லூன்றியென்னுஞ் சமுத்திர சங்கம தீர்த்தமாகும். இச் சிவன் கோயிலே, யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள சைவத் தலங்களெல்லாம் பின்பற்றி நித்திய நைமித்திகங்கள் நடத்துவதற்கு ஆதாரமாய் விளங்கியது; இலங்கை முழுவதிலும் செல்வத்திற் சிறந்த கோவிலும் வண்ணை வைத்தியேசுவரர்கோவிலேயாகும்; இத் தலத்தில் உலகமாதாவாகிய பாலாம்பிகை (தையல்நாயகி) யம்பாளோடு வைத்தியேசுவரப்பெருமான கோயில் கொண்டருளி ஆங்குள்ள சைவநன்மக்களெல்லார்க்கும் கருணை சுரந்தருளுவர்.

இப்படியான மகத்துவங்களோடு கூடிய வண்ணை வைத்தியேசுவர சுவாமி கோவிலில், வருகிற தை மாசம் சம்புரோட்சண கும்பாபிடேகம் நிகழுமென அறிதல் சைவநன்மக்களெல்லார்க்கும் பேரானந்தத்தை விளைக்கின்றது.

இக் கும்பாபிடேக தரிசனத்தை எவருந் தவறவிட வொண்ணாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்கப்பட்டவர்கள் யார்?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுங்கூட இராதென்று சொன் னேன். உருகுவே நண்பர் அதற்குப்பின் தமது கதையை நிறுத்திக்கொண்டார்.

அமெரிக்க நீக்ரோ மக்களைப்பற்றி ஏன் இப்படித் தப்பும் தவறுமான கருத்துக்கள் பிறநாட்டவர் மனத்தில் இடம் பெற்றன? இப்படிப்பட்ட உரு வெளித்தோற்றத்துக்கு, பொய்யான சித்திரத்துக்கு யார் காரணகர்த்தாக்கள்? இப் பொய்யான தோற்றம் வையம் நெடுகப் பரவுவதற்குப் பொதுவுடைமையினர் தங்களாலான ஒத்தாசை செய்திருக்கின்றனர்.

பொதுவுடைமையினர் கட்டிவிடும் பொய்க்கதைகளை வெளிப்படுத்தி உண்மை நடப்பை அமெரிக்கர் எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும். அதுவும் இல்லை அமெரிக்கரே தவறான கருத்துக்களைப் பரப்பியிருக்கிறார்கள். புத்தகங்களில் மட்டுமா, திரைப்பட உலகிலும் திரித்த கதைகள், தவறான செய்தி அறிவிப்புகள் அவ்வப்போது உணர்ச்சியைக் கிண்டிவிடுகின்றன.

இனவேறுபாடு படிப்படியாகக் குறைந்து தேய்ந்து வருகிறது. நீக்ரோவின் பொருளாதார நிலை வளர்ந்து ஓங்குவது சனநாயகத்துக்குப் பெருமையும் புகழும் அளிக்கிறது. மிசிசிப்பி நதி பாயும் வளமான நிலத்திலே "சுரண்டப்படுகிறான்." என்று சொல்லப்படுகின்ற நீக்ரோவின் நிலையானது, ரஷ்யாவிலும் அதன் சார்புநாடுகளிலும் வாழும் மக்களின் நிலையைவிடப் பன்மடங்கு மேலானதே.

அமெரிக்க நீக்ரோக்களில் 100 க்கு 95 பேர் 1865 ல் படிப்பறியாதவர்கள். இன்று நீக்ரோக்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் இல்லையென்றே சொல்லிவிடலாம். இந்த முன்னேற்றத்துக்குக் காரணம் அமெரிக்க கல்விமுறை. இக்கல்வி முறையை ஆதரித்துப் பரப்பியவை வெள்ளையர் தொகை அதிகரித்த இராச்சியங்களும் பகுதிகளும் ஆகும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் விவசாயிகள் அல்லாத நீக்ரோக்கள் குடியிருந்த வீடுகளில் 100-க்கு 17 அவர்களுடைய சொந்த வீடுகள். மற்றவை வாடகை. 1947-ம் ஆண்டிலோ அவர்கள் சொந்த வீடுகள் இரண்டு மடங்கு பெருகிவிட்டன. இன்று பத்து லட்சம் வீடுகள் நீக்ரோக்களுக்குச் சொந்தமானவை சராசரி 70 ஏக்கர் சொந்த நிலம் வைத்திருப்போர் தொகை 1,84,000 இது கசக்குண்டவர் செயலா?

அமெரிக்க முதலாளிகள் நீக்ரோக்களைக் கசக்கிப் பிழிகிறார்களென்பது எங்கும் பேசப்படும் ஒரு பேச்சு. ஜூலியஸ் ரோஸன்வல்ட் நிதியானது கல்வித்துறையில்பெரும்பாலும் நீக்ரோக்கள் பயனடைதற்கென்று 2,20,00,000 டாலர் செலவில் தென பாகத்தில 5,000 பள்ளிக்கூடங்களைக் கட்டி உதவியுள்ளது. 1902-ல் ஜான் டி. ராக்பெல்லர் ஏற்படுத்திய கல்விக் கழகம், தான் செலவிட்ட பணத்தில் 5ல் ஒரு பாகத்தை நீக்ரோக்களின் கல்விக்காகச் செலவிட்டது. அண்மையில் இதே ராக்பெல்லர், இளம் நீக்ரோக்கள் தனிப்பட நடத்தும் கல்லூரிகளுக்காக 50 லட்சம் டாலர் பொருளுதவி செய்திருக்கிறார். இவையெல்லாம் வெள்ளை முதலாளி கறுப்பரை ஒடுக்கும் செய்கைகளா?

நீக்ரோக்கள் சொந்தமாக நடத்துகின்ற செய்திப் பத்திரிகைகள் 150; பெரிய சஞ்சிகைகள் பல. இவற்றை வாசிப்பவர் 30 லட்சம் பேர். இப்பத்திரிகைகளும் வெளியீடுகளும் இன வேறுபாட்டைத் தாக்கி எழுதத் தயங்குவதே இல்லை. அவற்றுள் ஒன்றுகூட ஒடுக்கப்பட்டதுமில்லை. நீக்ரோப் பட்டாளம், மற்றவர் பட்டாளம் என்ற பாகுபாடும் இல்லை. அமெரிக்கப் படைகளில் வெள்ளையரும் நீக்ரோக்களும் கலந்த பட்டாளங்களுக்குத் தலைமை தாங்கும் நீக்ரோ அதிகாரிகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 3,000. நீக்ரோக்கள் இன்னும் எவ்வளவோ முன்னேற்றங்காண சனநாயகத்தில் வழி இருக்கிறது.

— அமெரிக்க செய்தி

## இளம் இந்திய எருதுகள்

இளம் இந்திய எருதுகள் நூறு ஊர்காவற்றுறையில் வந்திருக்கின்றனவென்றும் அவை இரண்டு கிழமைகளில் இந்நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பப்படுமென்றும் அறிய வருகின்றது.

## மது அருந்தாத் தலைமைக்காரர் தேவை

களுத்துறை குடாவஸ் கடுவ ஐக்கியசங்கக்கூட்டத்தில் திரு. ஆர்தர் வி. டையஸ் அவர்கள் பேசும்பொழுது இக்காலத் தலைமைக்காரருட் பெரும்பான்மையோர் மதுபானஞ் செய்பவர்களாயிருக்கிறார்கள். ஆகையினாலே அவர்கள் கள்ள மது விற்பனைக்கும் சூதாட்டங்களுக்கும் உதவி செய்கிறார்கள். மது அருந்தாதவர்களையே கிராமத் தலைவர்களாக அரசாங்கம் அமைக்கவேண்டுமென்ற அரசாங்கத்துக்கு மதிமொழி கூறினார்.

## தத்துவ ஞானத்தின் தனிப் பெருமை

வாழ்க்கையின் வசதிக்கு வேண்டிய பொருள்கள் முதலியவற்றின் தேவையல்ல இன்றைய உலகின் கண் உள்ள இன்னல்களுக்குக் காரணம். தத்துவஞானம் இன்மையே காரணமாகும் என்று Dr S. இராதாக்கிருஷ்ணன் பெங்களூர் நகரசபையிலே பேசும்பொழுது எடுத்துக் காட்டினார்.

## போற்ற வேண்டிய உலகப் பெரியார் நால்வர்

### பண்டித நேரு ஒருவர்

அவுஸ்திரேலிய எழுத்தாளர் திரு. டக்லஸ் வில்கி அவர்கள் போற்ற வேண்டிய உலகப் பெரியோர் நால்வருள் இந்திய பிரதம மந்திரி பண்டித நேரு அவர்கள் ஒருவரெனப் புகழுகின்றார். "சமநோக்கு, அறிவுசான்ற அடக்கம், பொறுமை" ஆகியவற்றின் ஆக்கத்தைச் செய்கிறார்கள், அதட்டு அரசியலின் ஆழ்ந்த சக்திகளை அவர்கள் அறிந்து விளங்குகிறார்கள். அக்காரணத்தால் அவர்கள் குரைப்பதில்லை உறுமுவதில்லை. ஆகக் குறைந்த சத்தத்துடன் ஆகக்கூடிய செல்வாக்கைச் செலுத்துகின்றார்கள்" எனத் தன் மதிப்புக்குக் காரணங் காட்டுகின்றார்.


வண்ணை தையல்நாயகி
கலிவெண்பா திருவூஞ்சல்
முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல்

சைவப்பிரகாச யந்திரசாலையில் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை சதம் 25


யாழ்ப்பாண நகரசபை

## அறிவித்தல்

### 1953-ம் ஆண்டு அநுமதிச்சீட்டுகள்

(1) வியாபார நிலயங்கள்
(2) அபாயமான, வெதுப்பு விளைக்கும்பொருள் வியாபாரங்கள்,
(3) வண்டிகள் மிருகங்களுடன் நாய்கள் பதிவு செய்தல்.

ஆகியவற்றின் 1953 ம் ஆண்டுக்குரிய அநுமதிச்சீட்டுகள் 1953ம் ஆண்டு பங்குனி 31-ந் திகதி அல்லது அத்திகதிக்கு முன் பெற்றுக்கொள்ள வேண்டும். என்றுத்தால் யாவரும் பொதுவாக அறிவிக்கப்படுகின்றனர்.

தவறுவோர் வேறு அறிவித்தல் இல்லாது வழக்குத் தொடரப்படுவர்.

கா. சண்முகம்,
நகரசபைக் காரியாதிகாரி,
நகரசபை,
யாழ்ப்பாணம்,
6—1—53.
G 55. 9—1—53.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 11—1—53——17—1—53

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

முதல் மூன்று நாட்களும் உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும் வரவு செலவு சமாளிப்பதிற் கஷ்டமிருக்கும். சுகவீனத்துக்கும் சிறு அபாயங்களுக்குமிடமுண்டு. வார மிகுதி வியாபார முயற்சிகளுக்கு நன்று

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

சொந்தக் காரியங்களுக்கு முதல் மூன்று நாட்களும் நன்மையாயிருக்கும். வாரத்தின்பின் அரைப்பகுதியில முதிர்ந்த சில சக தொழிலாளருடன் அல்லது முதலாளியுடன் திருத்தியீனப்படக்கூடும். செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க்கழிக்கவேண்டும். வார இறுதி சில நல்ல புதினங்களைத் தரும்.

**மிதுனராசி மிருகசிரிடம, 3.4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இந்த வாரம் ஆறுதல் பெறுவதிற் கஷ்டமிருக்கும். உமது நேரம் மற்றவர்களுடைய காரியங்களிற் செலவாகும். வாரத்தின் இறுதி மூன்று நாட்களும் அதிக கோபத்தையுண்டாக்கக்கூடும். அபாயங்களைப் பற்றிக் கவனமாயிருக்கவும்

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்த வாரம் குடும்பத் தொந்தரவுகள் உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும். அவமானம் ஆக்குவோரும் பழைய பகைவரும் உமக்குக் கோபம்உண்டாக்கக்கூடும். ஆனால் சித்திபெய்தமாட்டார்கள். தேகசுகத்தைப்பற்றி விசேடமாய்க்கண் தொந்தரவுகளைப்பற்றிக் கவனமாயிருக்கவும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.**

இந்த வாரம் போட்டியிடுவோரையும் எதிரிகளையும் நல்லாய்த் தோற்கடிப்பீர். வழக்கில் வெற்றியும் நிச்சயம். சில நீண்ட கால வாதங்களும் பிழைஎண்ணங்களும் நீங்கப்பெறும். ஆனால் குடும்பப் பகுதியில் எல்லாம் நலமாயிரா.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் சில தீர்மானஞ் செய்வதில் கஷ்டப்படுவீர். விசேட காரியங்களில் வேண்டியன செய்வதில் கஷ்டங்களுக்கிடமுண்டு. ஆனால் அவற்றை நீக்கக்கூடியதாயிருக்கும். வார இறுதியில் போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம்.

**துலாம் சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

தாயாருக்குச் சுகவீனம் அல்லது தாய்வழி இனத்தவரால் தொந்தரவுக்கிடமுண்டு. உமது சுகமும் தாக்குப்படக்கூடும். வியாபாரப் பகுதியில் எல்லாம் நன்று.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

வண்டிகள் இந்த வாரம் அதிக செலவை உண்டாக்கக்கூடும். மனச் சமாதானமிராது. பிறருடைய நிச்சயம். வார இறுதியில் உமக்குக் கோபம் உண்டாக்கக்கூடியவாறு சில அவமானத்தை உண்டாக்குவர்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.**

இந்த வாரம் விரைந்து சண்டை தொடுப்பீர். தேக சுகம தாக்குப்படக்கூடும். கண்வருத்தத்துக்கிடமுண்டு உம்முடைய காரியங்களில் சகோதர சகோதரிகள் அதிக உதவி செய்வர்.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

சில காலத்துக்குத் தேக சுகம் தொந்தரவாயிருக்கும் மனச்சலனத்துக்கும் குடும்பத்தொந்தரவுகளுக்குமிடமுண்டு. கவனமாயிராவிட்டால் சில நண்பரால் சதிசெய்யப்படுவீர்,

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்த வாரம் பணத்துறையில் திருத்தம் நிச்சயம். கஷ்டங்களுடனேயே யெனினும் பல சிக்கல்களை நீக்குவீர். குடும்பத் துறையிலும் திருத்தத்துக்கிடமுண்டு.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இந்த வாரம் நண்பர் அதிக உதவியாயிருப்பர். அதிக முயற்சியின் [illegible] முயற்சிகளிற் [illegible] உம்மை [illegible] போட்டியாள[illegible] ரை நீர் வெல்லுவீர்.


திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

திறமான ருணிமார்க்ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

Std. 2 ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.



வண்ணை ஸ்ரீ விசுவலிங்க வைத்தியேச்சுவர சுவாமிகோவில்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன சம்புரோக்ஷண

## கும்பாபிஷேகம்

வாலாம்பிகா சமேத வைத்தீசுவரப் பெருமான் திருவருள்முன்னிட்டு யாழ்ப்பாணத்திலே மிக்க அனுக்கிரகம பெற்று விளங்கும் வண்ணை ஸ்ரீவிசுவலிங்க வைத்தீசுவர சுவாமி கோவில, பழுதுற்று இருத்தலால், அதைப் புதுக்குவித்துச் சம்புரோக்ஷணம் செய்விப்பதற்காகச் சில வருஷங்கட்கு முன் வாலஸ் தாபனம் செய்யப்பெற்றுள்ளது. ஆலயம் இப்போது புதுக்குவிக்கப்பெறுகிறது. திருவருளை முன்னிட்டு வருகிற தை மாசம் 13 உ (26—1—53) திங்கட்கிழமை மிருகசீரிட நட்சத்திர சுபமுகூர்த்தத்தில் அஷ்டபந்தன சம்புரோட்சண கும்பாபிஷேகம் செய்ய நிச்சயித்திருக்கிறேன்

வைத்தியேசுவரசுவாமி,
தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம், 1-1-53.

இங்ஙனம்,
வை. கந்தப்பசெட்டியார்,
மனேஜரும் சொந்தக்காரரும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நீங்கள் இளமைப் பருவத்தையடைய ○○

சி. எம். சாமி

## தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்

இரத்தவிருத்தியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும்.
இல்வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும.
கிராழிவ, பவுத்திரம், மூலம், குன்மம், இடுப்புவலி,
வாய்வு, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

## குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு
தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்.
அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(சியாட்லாக் இனம்) (I)



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்,



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா,
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna. Jaffna on Friday January 9 1953.



## பண்டித, பாலபண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பரீட்சைகளுக்குரிய ஷை வகுப்புக்கள், யாழ்ப்பாணம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நந்தன ௵ தைமீ 4 ௳ (17-1-53 தொடக்கம் ஒவ்வொரு சனி ஞாயிறுவாரமும் விடுமுறைக் காலங்களிலும் நடைபெறும். சேர்ந்து படிக்க விரும்புவோர் எமக்கு விண்ணப்பிக்க, விபரங்களை எம்மிடம் நேரில் அல்லது கடிதமூலம் அறிந்துகொள்ளலாம்,

விலாசம் :
V. முத்துக்குமாரு M. A.
மனேஜர்,
(நாவலர்வித்தியாசாலை)
341, நாவலர் வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்,
M 217 6, 9-1 53.


## சிவனடியாருக்கு எதையும் அர்ப்பணஞ் செய்யுஞ் சிந்தையர்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

நாயனார் மகளுக்கு மணவினை நடக்கப்போவதாய்க் கூறினர். விரதியார் ஆசீர்வதித்தார். நாயனார் மகளைக் கொண்டுவந்து அவரை வணங்குவித்தார். வணங்கி யெழுந்த பெண்ணின் கூந்தலைப் பஞ்சவடி செய்தற்குத் தமக்குக் கொடுக்கும்படி கேட்டார் விரதியார். உடனே உடைவாளை உருவி அப் பெண்ணின் கருங்கூந்தலை அரிந்து நீட்டினர்! நாயனர். வாங்குவார் போல் நின்ற விரதியார் மறைந்து ஆகாயத்திலே உமாதேவியாரோடு இடபாரூடராய்த் தோன்றியருளினர். நாயனர் பரவசமாகி விழுந்து வணங்கினர்.

அருள்செய்த மொழிகேளா
அடற்சரிகை தனைஉருவிப்
"பொருள்செய்தாம் எனப்
பெற்றேன்" எனக்
கொண்டு பூங்கொடிதன்
இருள்செய்த கருங்கூந்தல
அடியில்அரிந் தெதிர் நின்ற
மருள்செய்த பிறப்பறுப்பார்
மலர்க்கரத்தி னிடைநீட்ட.
* * * *

வாங்குவார் போல்நின்ற மறைப்
பொருளாம் அவர் மறைந்து
பாங்கின்மலை வல்லியுடன்
பழையமழ விடையேறி
ஓங்கியவிண் மிசைவந்தார்;
ஒளிவிசும்பின் நிலன்நெருங்கத்
தூங்கியபொன் மலர்மாரி;
தொழும்பர்தொழு தெதிர்
விழுந்தார்.

வணங்கி எழுந்து நிற்கச் சிவபெருமான் தம்முடைய சந்நிதானத்திலே யிருந்து பேரின்பம் அநுபவிக்கும் பேற்றை நாயனாருக்கு அருளி மறைந்தருளினர்.

கலிக்காம நாயனர் சான்றாரை யடைந்து நிகழ்ந்தவற்றையறிந்து மகிழ்ந்து திருவருளைப் போற்றினர். ஆயினும் பணமகளின் கூந்தல் ஒழிந்தமையை நினைந்து வருந்தினர். அவருடைய மனத்தளர்ச்சி நீங்குமாறு சிவபெருமானது திருவருளாலே கூந்தலுண்டாக, திருமணத்தைச் சிறப்புறச்செய்து தனதுடைய ஊரையடைந்தார்.

வயர்கோன் கலிக்காமகோயனர்
மனக்களரும் இடர் நீங்கி
வானவர்நாயகர் அருளால்
புனைந்தமலர்க் குழல்பெற்ற
பூங்கொடியை மணம் புணர்ந்து
தனம் பொழிந்து பெருகுதனை
உலகெலாந் தலைசிறப்ப
இனமயிருந்த தம்முடைய
எயின்மூதூர் சென்றணைந்தார்.


## சபையார் பாலபாடங்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரின்பிரசுரமாக உள்ள பாலபாடங்கள், இலங்கை அரசினர் பாடபுத்தக பரிசிலனைச் சபையாரின் புதிய நிபந்தனைகளுக்கு அமைய, திருத்திப் புதுக்கி உயர்ந்த கிளேஸ் காகிதத்தில சிறந்தமுறையில் அச்சிட்டு வெளிவரலாயின,

| விபரம். | ரூ. ச. |
|---|---|
| சிறுபிள்ளைப் பாடம் ... ... | 35 |
| பாலபாடம் முதற் புத்தகம் ... | 40 |
| பாலபாடம் இரண்டாம் புத்தகம் ... | 60 |
| பாலபாடம் மூன்றாம் புத்தகம் ... | 75 |
| பாலபாடம் நான்காம் புத்தகம் ... | 95 |
| * பாலபாடம் ஐந்தாம் புத்தகம் ... | 80 |
| பாலபாடம் ஆறும் புத்தகம் ... | 1 10 |
| * பாலபாடம் ஏழாம் புத்தகம் ... | 90 |
| * பாலபாடம் எட்டாம் புத்தகம் ... | 1 — |
| செந்தமிழ் வாசக மஞ்சரி ... | 1 25 |
| இலக்கிய வாசகம் (4ம் வகுப்புக்குரியது) ... | 60 |

ஜி. ஸி. ஈ (G C. E) வகுப்புக்குரிய
சைவ சமய பாடப் புத்தகங்கள்.

| | |
|---|---|
| திருவருட்பயன் ... ... | 75 |
| சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரம் | 75 |
| திருக்குறள் அதிகாரம் 25—31 ... | 75 |
| தேவார திருவாசகத் திரட்டு ... ... | 65 |

இன்னும் ஆங்கிலதமிழ் கலாசாலைகளுக்கு உரிய(சபையார்) பிரசுரங்களும், தினவரவு இடாப்புகளும், எழுத் திறப்புப் பிரதிகள் (அச்சுக்கொப்பிகள்) இலக்கம் 1—6 வரையும்,

தொகையாக வாங்குவோர்க்கு தக்க கமிசனுடன் கிடைக்கும்.

மனேஜர்,
யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை.



உ

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

## வெளியிட்ட நூல்கள்

| | ரூ. ச. |
|---|---|
| கந்தபுராணம் (செய்யுள்) ... | 8 — |
| கந்தபுராணம் வசனம் ... | 5 — |
| திருவிளையாடற் புராணம் செய்யுள் ... | 8 50 |
| திருவிளையாடற் புராணம் வசனம் ... | 2 — |
| பாரதம் ஆதி பருவம் உரை ... | 3 50 |
| சேது புராணம் ... | 3 — |
| இராமாயணம்—பாலகாண்டம் (குறிப்புரை) | 2 50 |
| நன்னூற் காண்டிகையுரை ... | 3 50 |
| ,, விருத்தியுரை ... | 3 50 |
| அருட்பா ... | 1 75 |
| சைவசமய நெறியுரை ... | 1 25 |
| பெரியபுராண வசனம் ... | 2 50 |
| பெரியபுராணம் செய்யுள் ... | 5 — |
| நாவலர் சரித்திரம் ... | 1 25 |
| இலக்கணச் சுருக்கம் ... | 1 — |
| சைவ வினாவிடை (1) ... | 20 |
| சைவ வினாவிடை (2) ... | 65 |
| முதலாம் பாலபாடம் ... | 20 |
| இரண்டாம் பாலபாடம் ... | 35 |
| மூன்றாம் பாலபாடம் ... | 65 |
| நான்காம் பாலபாடம் ... | 1 75 |
| சிவாலய தரிசன விதி ... | 20 |
| அபிராமியந்தாதி யுரை ... | 25 |
| திருக்குறள் உரை ... | 5 — |
| திருக்கோவையார் உரை ... | 3 — |
| சொலமறுத்தலாதி ... | 1 50 |
| திருமுருகாற்றுப்படை ... | 25 |
| தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ... | 1 25 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு ... | 25 |
| நித்தியகரும விதி ... | 15 |
| பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு | 15 |
| கந்தரலங்காலரம், கந்தரனுபூதி ... | 15 |
| மதுரை அறுபத்துநான்கு திருவிளையாடற் போற்றிக் கலி வெண்பா ... | 05 |
| விநாயக அகவல் ... | 10 |
| சரஸ்வதி யந்தாதி ... | 05 |
| துண்டிவிநாயகர் திருவருட்பா ... | 05 |
| விநாயககவசம், சிவகவசம், சத்திகவசம், சரசுவதி தோத்திரம் | 10 |
| இலக்குமி தோத்திரம் | |

இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
மனேஜர்,
சைவப்பிரகாசயந்திரசாலை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org